அன்றன்றுள்ள அப்பம் வழங்கும்

# ஒலிவமரக் கன்றுகள்

அக்டோபர் - 2024 | மரம் - 3 | கன்று - 10 | ஆண்டு சந்தா ரூ. 250/- | தனிப்பிரதி ரூ. 25/- | ஆயுள் சந்தா ரூ. 2500/-

## பிள்ளைகளே, இப்பொழுது எனக்குச் செவிகொடுங்கள்; என் வாயின் வசனங்களை விட்டு நீங்காதிருங்கள்.

நீதிமொழிகள் 5:7



ஆசிரியர்: J. ஜோசப் ஆஸ்பார்ன் ஜெபத்துரை



# மனம் விட்டு உங்களுடன்...

கிறிஸ்துவுக்குள் பாசத்திற்குரிய எனதன்பு ஒலிவமரக் கன்றுகள் இதழின் வாசகப் பெருமக்களே! உங்கள் அனைவருக்கும் ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். இந்த சிறார் இதழின் வழியாக உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

இளமைக் காலம் என்பது ஒரு வரப்பிரசாதம். பொங்கிப் பிரவாகமெடுக்கும் ஆற்றலின் காலம். காட்டாறுபோல, தடைகளைக் கண்டு அஞ்சி நடுங்காமல் சீறிப் பாயும் காலம். இளமைக் காலம் விளைவுளை எண்ணித் தயங்காமல் களம் புகும் காலம். உலகம் எப்போதுமே இளைஞர்களை அரவணைக்கிறது. மாற்றங்கள் எப்போதுமே இளையவர்களைச் சுற்றியே அமைகிறது.

எனக்கு நூறு இளைஞர்களைக் கொடுங்கள் நான் இந்தியாவை மாற்றிக் காட்டுகிறேன் என விவேகானந்தர் சொன்னதாகச் சொல்வார்கள். நிறுவனங்களில் இளைஞர்கள் அதிகமாய் இருக்கும்போது அந்த நிறுவனம் வளர்ச்சியை நோக்கி தாவி ஓடும். திருச்சபைகளில் இளைஞர்கள் ஆர்வமாய் ஈடுபடும்போது திருச்சபை மறுமலர்ச்சியடையும்.

வேதாகமமும் ஏராளமான இளைஞர்களைப் பற்றிப் பேசுகிறது. பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் ஏராளம் இளைஞர்கள் பவனிவருகிறார்கள். அவர்கள் ஆன்மிகப் பாடத்தை தங்கள் வாழ்க்கையில் சுமந்து திரிகிறார்கள்.

வெறும் பன்னிரண்டு இளைஞர்களைக் கொண்டு உலகையே மாற்றிக் காட்டியவர் இயேசு. அவரே இளைஞராகத் தான் இந்தப் பூமியில் பவனி வந்தார்.

இளைஞர்களின் இந்தப் பேராற்றல் சரியான இடங்களில் செலுத்தப்படும்போது குவி லென்ஸ் போல அவர்கள் எரிகிறார்கள். அவர்களுடைய ஆற்றல் தவறான இடங்களைத் தழுவும் போது அணைந்து போகிறார்கள். இளைஞர்கள் இறைப் பற்றில் வளரும் போது திருச்சபை நிமிர்கிறது. அவர்களுடைய செயல்களால் சமூகம் மாற்றமடைகிறது.

காலம் முன்பு போல் இல்லை. காலையில் எழுந்து காலைக் கடன்கள் முடித்து, பேப்பர் படித்து, சாப்பிட்டு, வேலைக்குப் போய், மாலையில் வீடு திரும்பி, சாப்பிட்டு, ஜெபித்து தூங்கும் அன்றைய காலம் தொழில்நுட்பம் தீண்டாத தூய்மைக் காலம். அப்போது எல்லாமே மெதுவாய் நடந்தன. ஆனாலும், எல்லோருக்கும் நேரம் இருந்தது. ஆலயம் செல்லவும், ஜெபிக்கவும், உறவினர்களோடு செலவிடவும் நேரம் இருந்தது.

ஆனால் இன்றைக்கு அப்படி இல்லை. டிஜிட்டல் முகத்தோடு ஸ்மார்ட் போன்கள் இரவுப் போர்வைக்குள் வெகுநேரம் விழித்திருக்கின்றன. நள்ளிரவு தாண்டிய ஏதோ ஒரு ஜாமத்தில் தான் இளைஞர்கள் தூங்கப் போகிறார்கள். விழித்தெழும் போது அவர்களுக்கு வாட்சப் தான் வாசல் திறக்கிறது, இன்ஸ்டாகிராம் தான் கோலம் போடுகிறது. சமூக வலைத்தளங்கள் தான் அவர்களுடைய பொழுதுகளை புற்றீசல் போல சுற்றிக் கொள்கின்றன.

எதைச் சாப்பிடுகிறோம், எங்கே போகிறோம், சுற்றிலும் என்ன நடக்கிறது என்பதை அறியாத ஒரு வாழ்க்கை ஓட்டத்தை இந்த தொழில்நுட்பங்கள் இளைஞர்களின் கையில் திணித்து விட்டன. இந்தக் காலகட்டத்திலும் இறைப் பற்றை இளைஞர்களின் இதயத்தில் விதைக்க வேண்டும். அதுவே மிகப்பெரிய பணி. அதுவே அடுத்த தலைமுறைக்கு கிறிஸ்தவத்தைச் சுமந்து செல்லும் வழி.



அன்புடனும், அக்கறையுடனும்:

*அங்கிள்.* **J. ஜோசப் ஆஸ்பார்ன் ஜெபத்துரை**

# Mint ஒற்தலாம் புதினா



**... நீங்கள் ஒற்தலாமிலும் வெந்தயத்திலும் சீரகத்திலும் தசமபாகம் செலுத்தி... (மத்தேயு 23:23)** இவ்வசனத்தில் இஸ்ரவேல் மக்களின் அன்றைய வாழ்க்கையில் **ஒற்தலாம் (புதினா)** முக்கிய இடம் வகித்துள்ளது என்பதை அறிந்து கொள்ளலாம். ஒற்தலாம் எனும் சொல் வேதாகமத்தில் இரண்டு முறை மட்டுமே இடம்பெற்றுள்ளது. இவ்விதழில் ஒற்தலாம் என்னும் புதினாவைக் குறித்து பார்ப்போம்.

**புதினா** (Mint) என்பது மருத்துவ மூலிகை செடியாகும். இதனுடைய அறிவியல் பெயர் Mentha Spicata என்பதாகும். இது Lamiaceae என்னும் தாவரக் குடும்பத்தைச் சார்ந்தது. உலகெங்கும் சுமார் 30 புதினா இனங்களில் 500 வகைகள் உள்ளன. புதினா எல்லா பருவ காலத்திலும் கிடைக்கும். இதற்கு மிளகுக்கீரை என்ற இன்னொரு பெயரும் உண்டு. நாம் பெரும்பாலும் சமைக்கும் உணவுகளில் மணமூட்டுவதற்காகப் பயன்படுத்தப்படும் பொருள்களில் புதினா இலைகளும் அடங்கும். இந்த புதினா இலைகளைக் கொண்டு சமைக்கப்படும் உணவுக்கு ஒரு தனி சுவையே உண்டு. மருத்துவ குணங்கள் கொண்ட புதினா சித்தமருத்துவத்தில் பயன்படுத்தப்படுகிறது.

புதினாவின் சுவை, நறுமணம் மற்றும் புத்துணர்ச்சி தரும் பண்புகளின் காரணமாக கிரேக்கத்தில் விருந்தினர்களை வரவேற்க சாப்பாட்டு மேசைகளில் புதினாயிலை தேய்க்கப்பட்டது. மத்திய கிழக்கில் விருந்தினர்கள் வருகையில் வரவேற்பு பானமாக புதினா தேநீர் வழங்கப்பட்டது. அமெரிக்காவில் பூர்வீக மக்களால் ஐரோப்பியர்களின் வருகைக்கு முன்பே இத்தாவரம் பயன்பாட்டில் இருந்துள்ளது.

இது ஈரப்பதமான, வளமான, தளர்வான மண்ணில் நன்கு செழித்து வளரும். இது 1-2 அடி உயரம் வரை வளரும் செடி வகை தாவரத்தின் இலைப்பகுதியாகும். இதனுடைய தண்டுகள் பசுமையாகவும், சதைப்பற்றுடனும் சதுர வடிவத்துடன் காணப்படுகிறது. இத்தாவரம் நிலத்தடி









வேர்த்தண்டு கிழங்குகளைக் கொண்டுள்ளது. அக்கிழங்குகள் மூலமாக தரைக்கடியில் பரந்து விரிந்து புதிய தாவரமாக தோன்றுகிறது.

இதனுடைய இலைகள் அடர் பச்சை நிறத்தில் 5-9 செமீ நீளம், 1.5-3 செமீ அகலத்துடன் ரம்பம் போன்ற விளிம்புகளையும் கொண்டுள்ளது. இத்தாவரத்தில் பூக்கள் வெள்ளை, ஊதா வண்ணங்களில் தோன்றுகின்றன. இதனுடைய பழம் நான்கு விதைகளைக் கொண்டுள்ளது.

புதினா மிக அதிகளவு விட்டமின் Vitamin A-வையும், அதிகளவு Vitamin C மற்றும் B9 (folate) கொண்டுள்ளது. மேலும் இதில் விட்டமின் B1 (thiamine), B2 (riboflavin), B3 (niacin), B6 (pyridoxine) ஆகியவையும் உள்ளன. இதில் கார்போஹைட்ரேட், புரதம், நார்ச்சத்து, இரும்புச்சத்து, செம்புச்சத்து, மாங்கனீசு, பொட்டாசியம் ஆகியவையும் காணப்படுகின்றன. மேலும் இதில் கால்சியம், மெக்னீசியம், துத்தநாகம் போன்ற தாதுக்களும் காணப்படுகின்றன.

புதினாவின் இலைகள் மற்றும் பூக்களை உலர்த்தி காய வைத்து அதிலிருந்து புதினா எண்ணெய் தயாரிக்கப்படுகிறது. புதினா எண்ணெய் பல்வேறு நன்மைகளை வழங்குகிறது. புதினா எண்ணெயின் இனிமையான நறுமணம் மன அழுத்தத்தைக் குறைக்க உதவுகிறது. இதனை அரோமோதெரபிகளில் பயன்படுத்துகிறார்கள்.

புதினா எண்ணெய் வாயு, நெஞ்செரிச்சல், வயிறு வீக்கம் மற்றும் அஜீரணம் போன்ற பல்வேறு செரிமான பிரச்சனைகளை குணப்படுத்துகிறது; குளிர் அல்லது காய்ச்சலால் பாதிக்கப்படும் போது, சுவாசிக்கையில் காற்றை உள்ளிழுக்கும் போது வீக்கமடைந்த நாசிப் பாதைகளுக்கு இதமளிக்கிறது. தலைவலிக்கு இயற்கையான தீர்வாகும்; புதினா எண்ணெயில் உள்ள மெந்தால் வலி நிவாரணி பண்புகளைக் கொண்டுள்ளது; தசைகள் வலி மற்றும் கடினமான மூட்டு வலிகளுக்கு தீர்வளிக்கிறது; தோலுக்கும் புத்துணர்வான உணர்வை கொடுத்து ஆரோக்கியமாக்க செய்கிறது.

புதினா எண்ணெய் ஆன்டிசெப்டிக் மற்றும் அரிப்பு நீக்கும் தன்மையைக் கொண்டுள்ளது. மேலும் இது தோலில் நோய் தொற்று மற்றும் நமச்சலை நீக்கி தோல் சுத்தப்படுத்தியாகவும் செயல்படுகிறது. முகத்தில் தோன்றும் பருக்கள் மற்றும் வடுக்களை நீக்கவும் இது உதவுகிறது. மேலும் குளவிகள், தேனீக்கள் உள்ளிட்ட பூச்சிகளின் விஷக்கொடுக்குகள் தாக்குதலால் தோலில் உண்டாகும் எரிச்சல் மற்றும் நமச்சலை சீர்செய்ய புதினா இலைச்சாறு உதவுகிறது.

புதினா பசியுணர்வினை உண்டாக்குகிறது. இதனை வாயில் போட்டு உண்ணும் போது உண்டாகும் புத்துணர்ச்சி மற்றும் நறுமணத்தால் உமிழ்நீர் மற்றும் செரிமான நொதிகள்

நன்றாக சுரக்கப்பட்டு உணவு நன்கு செரிமானமாகிறது. புதினாவில் உள்ள கார்வோன் குடலின் மெல்லிய தசைகளில் பிடிப்பு ஏற்படாமலும், பிடிப்பு ஏற்படின் அதனைக் குறைக்கவும் உதவுகிறது. மேலும் புதினாவில் உள்ள மெந்தால் செரிமான மண்டலத்தில் உண்டாகும் வயிற்றுப்போக்கு, வாயு தொந்தரவு போன்றவற்றிற்கு நிவாரணம் அளிக்கிறது. ஆரோக்கியமான செரிமானத்திற்கு இதனை அடிக்கடி அளவோடு உணவில் சேர்த்துக் கொள்ளலாம்.

புதினாவில் உள்ள பாலிபீனாலான ரோஸ்மரினிக் அமிலம் வயதானவர்களின் நினைவாற்றலை அதிகப்படுத்துவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. மேலும் இதனை அடிக்கடி உணவில் சேர்த்துக் கொள்வதால் மனஅழுத்தம் குறைந்து நினைவாற்றல் அதிகரிப்பதாக ஆய்வுகள் கூறுகின்றன.

புதினாவை வாயில் போட்டு மெல்லும் போது அது கிருமிநாசினியாக செயல்பட்டு வாய்க்கு புத்துணர்ச்சி அளிக்கிறது. இது நாக்கு மற்றும் பற்களை சுத்தம் செய்வதோடு வாயில் பாக்டீரியாக்களின் வளர்ச்சியையும் தடுக்கிறது. ஆதலால்தான் மவுத்வாஷ், பற்பசை உள்ளிட்ட வாயினை சுத்தம் செய்யும் பொருட்களில் இது சேர்க்கப்படுகிறது. ஈறுகள் மற்றும் பற்கள் ஆரோக்கியத்திற்கு இதனை அடிக்கடி வாயில் போட்டு மெல்லலாம்.

இதில் உள்ள மெந்தால் மூளை மற்றும் நரம்புகளில் உண்டாகும் அழுத்தத்தை குறைக்கிறது. புதினாவின் நறுமணத்தை நுகரும் போது மன அமைதி கிடைக்கிறது. இதனை உண்ணும்போது உண்டாகும் வாசனையால் மந்தம், பதட்டம், மனசோர்வு ஆகியவை நீங்குவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. மனஅழுத்தம் குறைந்து ஆழ்ந்த உறக்கம் கிடைக்க புதினா எண்ணெயை தலையணையில் தோய்த்து அதில் சாய்ந்து உறங்கும் பழக்கம் நடைமுறையில் உள்ளது.

குமட்டல் மற்றும் தலைவலிக்கு புதினாவானது உடனடியாக தீர்வளிக்கிறது. குமட்டல் உணர்வு தோன்றும் போது புதினாயிலைகளை கையில் கசக்கி நுகரும் போது புதினாவின் நறுமணம் உள்ளே சென்று புத்துணர்ச்சியை உண்டாக்கி குமட்டலுக்கு தீர்வளிக்கிறது. பயணத்தின்போது குமட்டல் ஏற்பட்டால் உடனடியாக புதினாவை நசுக்கி நுகர்ந்து தீர்வினைப் பெறலாம். தலைவலி தைலத்துடன் புதினாயிலைச் சாறு, புதினா எண்ணெய் சேர்த்து தலையில் தேய்த்தால் தலைவலி குணமாகும். இதனை ஆய்வு முடிவுகளும் உறுதி செய்கின்றன. எனவே இது தலைவலி மற்றும் ஒற்றை தலைவலியைக் குறைக்கும் இயற்கை நிவாரணியாக உள்ளது.

புதினாவில் உள்ள மெந்தால் மூக்கடைப்பினை நீக்குவதாக ஆய்வுகள் கூறுகின்றன. மேலும் ஜலதோசம், ஆஸ்துமா ஆகியவற்றால் தொண்டை, மூச்சுக்குழாய், நுரையீரல் ஆகியவற்றில் உண்டாகும் சுவாசக் கோளாறுகளை நீக்கி அவை நன்கு செயல்பட புதினா உதவுகிறது. இது நாள்பட்ட இருமலால் தொண்டை, மூக்கு உள்ளிட்ட சுவாசப் பாதைகளில் உண்டாகும் எரிச்சலை போக்க உதவுகிறது. ஆதலால்தான் இருமல் டானிக்குகளில் புதினாவானது சேர்க்கப்பட்டு தயார் செய்யப்படுகிறது.

புதினாவில் உள்ள மெந்தால் செரிமான சுரப்புகளைத் தூண்டி செரிமானம் நன்கு நடைபெறச் செய்வதோடு உணவில் உள்ள ஊட்டச்சத்துகளை உறிஞ்சவும், கொழுப்பினை முழுவதும் எரித்து ஆற்றலினை பெறவும் உதவுகிறது. எனவே உடல் எடையை இழக்க விரும்புபவர்கள் புதினாவை அடிக்கடி உணவில் சேர்த்துக் கொள்ளலாம்.

இதனைக் கர்ப்பிணிகள் அளவுக்கு அதிகமாக உண்ணும்போது கருப்பைக்கு பிரச்சினையை ஏற்படுத்தக்கூடும். எனவே இதனை கர்ப்பிணிகள் அளவோடு பயன்படுத்த வேண்டும். இதனை அளவுக்கு அதிகமாக உண்ணும் போது கல்லீரல் மற்றும் சிறுநீரகங்களில் பிரச்சினை ஏற்படக்கூடும்.

# அவர் வழி எப்பவும் தனி வழி தான்..

இயேசு தம் சீஷருக்குத் திபேரியாக் கடல் அருகே மீண்டும் தம்மை வெளிப்படுத்தினார். வெளிப்படுத்தின விவரமாவது: சீமோன் பேதுரு, திதிமு எனப்பட்ட தோமா, கலிலேயாவிலுள்ள கானாவைச் சேர்ந்த நாத்தான்வேல், செபதேயுவின் மக்கள் ஆகியோரோடு இயேசுவின் சீஷர்களுள் வேறு இருவரும் கூடியிருந்தனர்.

அப்போது சீமோன் பேதுரு அவர்களிடம், ‘நான் மீன்பிடிக்கப் போகிறேன்’ என்றார். அவர்கள், ‘நாங்களும் உம்மோடு வருகிறோம்’ என்று போய்ப் படகில் ஏறினார்கள். அன்று இரவு அவர்களுக்கு மீன் ஒன்றும் கிடைக்கவில்லை.

ஏற்கெனவே விடியற்காலை ஆகியிருந்தது. இயேசு கரையில் நின்றார். ஆனால் அவர் இயேசு என்று சீடர்கள் அறிந்து கொள்ளவில்லை.

இயேசு அவர்களிடம், ‘பிள்ளைகளே! மீன் ஒன்றும் அகப்படவில்லையா?’ என்று கேட்டார். அதற்கு அவர்கள், ‘இல்லை’ என்றார்கள். அவர், ‘படகின் வலப்பக்கத்தில் வலை வீசுங்கள்; மீன் கிடைக்கும்’ என்று அவர்களிடம் கூறினார்.





அவர்களும் அவ்வாறே வீசினார்கள். மீன்கள் மிகுதியாய் அகப்பட்டதால் அவர்களால் வலையை இழுக்க முடியவில்லை.

இயேசுவின் அன்புச் சீடர் அதைக்கண்டு பேதுருவிடம், 'அங்கு நிற்பவர் ஆண்டவர்தாம்' என்றார்.

அதைக் கேட்டவுடன், தம் ஆடையைக் களைந்திருந்த சீமோன் பேதுரு, ஆடையை இடுப்பில் கட்டிக்கொண்டு கடலில் குதித்தார். மற்றச் சீஷர்கள் மீன்களுடன் வலையை இழுத்துக்கொண்டு படகிலேயே வந்தார்கள். அவர்கள் கரையிலிருந்து வெகு தொலையில் இல்லை; ஏறக்குறைய நூறு மீட்டர் தொலைவில்தான் இருந்தார்கள். படகைவிட்டு இறங்கியவுடன், கரியினால் தீ மூட்டியிருப்பதையும், அதன்மீது மீன் வைத்திருப்பதையும் அவர்கள் கண்டார்கள். அங்கு அப்பமும் இருந்தது.

இயேசு அவர்களிடம், 'நீங்கள் இப்போது பிடித்தவற்றில் சில மீன்களைக் கொண்டு வாருங்கள்' என்றார்.

சீமோன் பேதுரு படகில் ஏறி, வலையைக் கரைக்கு இழுத்தார். வலை நிறைய பெரிய மீன்கள் இருந்தன. அவற்றின் எண்ணிக்கை நூற்று ஐம்பத்து மூன்று. இத்தனை மீன்கள் இருந்தும் வலை கிழியவில்லை.

இயேசு அவர்களிடம், 'உணவருந்த வாருங்கள்' என்றார். சீஷர்களுள் எவரும், 'நீர் யார்?' என்று இயேசுவிடம் கேட்கத் துணியவில்லை. ஏனெனில், அவர் ஆண்டவர்தாம் என்று அவர்கள் அறிந்து கொண்டார்கள்.

இயேசு அவர்கள் அருகில் வந்து, அப்பத்தை எடுத்து அவர்களிடம் கொடுத்தார்; மீனையும் அவ்வாறே கொடுத்தார். இவ்வாறு, இயேசு இறந்து உயிருடன் எழுப்பப்பட்ட பின்பு, தம் சீடருக்கு இப்போது மூன்றாம் முறையாகத் தரிசனமானார்.

அவர்கள் உணவருந்தியபின், இயேசு சீமோன் பேதுருவிடம், 'யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா?' என்று கேட்டார்.

அவர் இயேசுவிடம், 'ஆம் ஆண்டவரே, உம்மை நேசிக்கிறேன் என்பதை நீர் அறிவீர்!' என்றார். இயேசு அவரிடம், 'என் ஆட்டுக்குட்டிகளை மேய்ப்பாயாக' என்றார்.

இரண்டாம் முறையாக இயேசு அவரிடம், 'யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா?' என்று கேட்டார். அவர் இயேசுவிடம், 'ஆம் ஆண்டவரே, உம்மை நேசிக்கிறேன் என்பதை நீர் அறிவீர்!' என்றார். இயேசு அவரிடம், 'என் ஆடுகளை மேய்ப்பாயாக' என்றார்.

மூன்றாம் முறையாக இயேசு அவரிடம், 'யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ என்னை நேசிக்கிறாயா' என்று இயேசு மூன்றாம் முறை கேட்டதால், பேதுரு துக்கப்பட்டு அவரிடம், 'ஆண்டவரே, நீர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறீர், நான் உம்மை நேசிக்கிறேன் என்பதையும் நீர் அறிவீர்' என்றார்.

இயேசு அவரிடம், 'நீ இளவயதுள்ளவனாயிருந்தபோது உன்னை நீயே அரைகட்டிக்கொண்டு, உனக்கு இஷ்டமான இடங்களிலே நடந்து திரிந்தாய்; நீ முதிர்வயதுள்ளவனாகும்போது உன் கைகளை நீட்டுவாய்; வேறொருவன் உன் அரையைக் கட்டி, உனக்கு இஷ்டமில்லாத இடத்துக்கு உன்னைக் கொண்டு போவான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்' என்றார்.

பேதுரு எவ்வாறு இந்த தேவனை மகிமைப்படுத்தப்போகிறார் என்பதைக் குறிப்பிட்டே அவர் இவ்வாறு சொன்னார். இதைச் சொன்னபின் பேதுருவிடம், 'என்னைப் பின்பற்றிவா' என்றார்.

தொடரும்...



# கரடி

இஸ்ரவேல் ஜனங்களை நிந்தித்துக் கொண்டிருந்த கோலியாத்துடன் சண்டையிட தாவீது விரும்புகிறான் என்று போர் வீரர்கள் சிலர் சவுலிடம் சொல்கிறார்கள். அதனால் தாவீதிடம் சவுல்: 'இந்த பெலிஸ்தனோடு மோத உன்னால் முடியாது. நீ ஒரு இளைஞன்' என்கிறார். அதற்கு தாவீது: 'என் தகப்பனுடைய ஆடுகளைக் கொண்டுபோன ஒரு **கரடி**யையும் ஒரு சிங்கத்தையும் நான் கொன்று போட்டிருக்கிறேனே, இந்தப் பெலிஸ்தன் எம்மாத்திரம்' என்று சொல்கிறான். (வாசித்தறிக: I சாமு. 17:34,36) கரடி தன் பின்னங்கால்களில் நின்றுகொண்டு எதிரிகளின் முகம் மற்றும் கண்களை கொடூரமாக தாக்கும் விலங்காகும். அது தன்னுடைய கூரிய நகங்களால் எதிரியின் முகத்தைப் பிளந்து, முகத்தைக் கடித்துக் குதறி விடும். அப்படிப்பட்ட கொடிய விலங்கான கரடியையும், சிங்கத்தையும், கோலியாத்தையும் வெல்ல தாவீதுக்கு தேவன் உதவினார். இவ்விதழில் கரடியைக் குறித்து பார்ப்போம்.

**கரடி (Bear)** ஒரு ஊனுண்ணிப் பாலூட்டி விலங்கு ஆகும். கரடிகள் 'ஊர்சிடே' (Ursidae) என்னும் குடும்பப் பிரிவில் உள்ளன. பனிக்கரடிகளும், கொடுங்கரடிகள் என்னும் பழுப்பு நிறக்கரடிகளும் ஊனுண்ணிப் பாலூட்டிகளில் மிக பெரியது ஆகும்.

கரடிகள் சராசரியாக 4 அடி உயரமும், 115 கிலோ எடையும் கொண்டவை. கரடிகளின் கண்கள் சிறிதாக இருக்கும். இவை, குறைந்த பார்வைத் திறன் உடையவை. ஆனால் நல்ல மோப்பத் திறனும் கேட்கும் திறனும் கொண்டவை. உடலில் அதிக முடிகளைக் கொண்டுள்ளன. மேலும் இவை இரண்டு கால்களினால் நிற்க வல்லவை. கரடிகள், வேட்டையாடவும் எதிரிகளைத் தாக்கவும் நீண்டு வளர்ந்திருக்கும் தங்கள் கூரான நகங்களைப் பயன்படுத்துகின்றன. இந்த நகங்களில் சகதியும் அழுக்கும் சேர்ந்திருக்கும். பாக்டீரியாக்கள் மிகுந்திருக்கும். எனவே இவற்றால் தாக்கப்படுபவரின் காயங்கள் எளிதில் குணமடையாது.

கரடிகள் தேன், பழங்கள், பழ வித்துக்கள், தண்டுகள், கிழங்குகள், மரப்பட்டைகள், மாமிசம், மீன், கரையான், பூச்சி போன்றவற்றை உண்ணுகின்றன. இவை, மரங்களின் உச்சிவரை எளிதில் ஏறக்கூடியவை. கரடிகள் நாவற்பழத்தையும், தேனையும் மிகவும் விரும்பி உண்ணும். மலைக் குகைகளிலும், மரங்களின் உச்சிகளிலும் உள்ள தேன் கூடுகளை கைப்பற்றும். இது கரையானையும் விரும்பி உணவாகக் கொள்கின்றன. கரடிகள் கரையான் புற்றில்



வாய் வைத்து மிகுந்த ஓசையுடன் கரையான்களை அப்படியே உறிஞ்சிவிடும் திறன் கொண்டவையாகும்.

கரடிகளுக்கு 42 பற்கள் உள்ளன. கரடிகளால் வேகமாக மரம் ஏறவும், நீச்சல் அடிக்கவும் முடியும். காட்டில் ஓடும் நதியில் குளிப்பது கரடிக்கு மிகவும் பிடித்தமான ஒன்று.

கரடிகளின் கர்ப்ப காலம் ஏழு மாதங்கள். ஒரு முறையில் இரண்டு குட்டிகள் பிறக்கும். குட்டிகளுக்கு இரண்டு அல்லது மூன்று வயதாகும் வரை அம்மா கரடிகள்தான் முதுகில் தங்கள் குட்டிகளைச் சுமந்து செல்லும்.

கரடிகளை பிடித்து, சங்கிலிகளால் கட்டி, வித்தை காட்டி பணம் சம்பாதிக்கும் வழக்கம் பீகார் மற்றும் ராஜஸ்தான் மாநிலங்களில் காணப்படுகிறது.

குளிர் மிகுந்த பகுதிகளில் வாழும் பழுப்பு நிற கரடிகள் மற்றும் அமெரிக்க கருப்பு கரடிகள் மட்டுமே வருடத்தில் 6 மாதம் வரை தூங்கும் தனித்துவமான தன்மை கொண்டவை. இது மிகக் கடுமையான குளிர்காலம் முழுவதையும் ஆழ்ந்த உறக்கத்திலேயே (Hibernation) கழித்துவிடுகின்றன. அவ்வாறு உறங்கும் போது இவற்றின் உடலில் இருக்கும் சக்தி விரயமாகாமல் இருப்பதற்காக இவற்றின் இதயத் துடிப்பு மிகவும் குறைந்துவிடும். இந்த காலக்கட்டத்தில் கரடிகள் சாப்பிடுவதில்லை. தண்ணீர் அருந்துவதில்லை. மேலும், கருவுற்ற பெண் துருவ கரடிகளும் தங்கள் சிறிய குட்டிகளைப் பாதுகாப்பதற்காக பனிப்பொழிவுகளில் தோண்டப்பட்ட குகைகளில் ஆழ்ந்த உறக்கநிலைக்கு செல்லும்.

உலகில் எட்டு வகையான கரடிகள் உள்ளன. அமெரிக்க கருப்பு கரடி, ஆசிய கருப்பு கரடி, பழுப்பு நிறக்கரடி, ராட்சத பாண்டா கரடி, துருவ கரடி, சோம்பல் கரடி, கண்ணாடிக் கரடி, சூரியக் கரடி. இந்தியாவில் நான்கு வகையான கரடிகள் உள்ளன. அவை ஆசிய கருப்பு கரடி, பழுப்பு கரடி, சோம்பல் கரடி மற்றும் சூரியக் கரடி.

உலகிலேயே அதிக எண்ணிக்கையிலான கரடி அமெரிக்க கருப்பு கரடி ஆகும். 39-409 கிலோ வரை இருக்கும். இது கனடா, அமெரிக்கா மற்றும் வடக்கு மெக்சிகோவில் வட அமெரிக்காவில் இருக்கும். கருப்பு நிறத்தில் மட்டுமன்றி, நீலம் கலந்த சாம்பல், வெள்ளை மற்றும் பழுப்பு நிறத்திலும் இருக்கும். அவ்வகை கரடிகளால் மணிக்கு 35 மைல் வேகத்தில் ஓட முடியும். இது பெரும்பாலும் தாவரங்களை உண்ணும். சில வேளையில் இறைச்சி மற்றும் பூச்சிகளையும் சாப்பிடும். இது உலகளவில் 750,000 வரை உள்ளது.

ஆசிய கருப்பு கரடியின் மார்பில் ஒரு பெரிய நிலவு வடிவத்தில் இளம் மஞ்சள் நிற ரோமங்கள் இருப்பதால் இது சந்திரன் கரடி என்று அழைக்கப்படுகிறது. 65-150 கிலோ வரை இருக்கும். இது அடர் பழுப்பு மற்றும் கறுப்பு நிறத்தில் இருக்கும். இது தெற்கு ஆசியா மற்றும் தென்கிழக்கு ரஷ்யாவில் இருக்கும். ஆசிய கறுப்பு கரடிகள் அனைத்துண்ணிகளாக உள்ளன. இது உறங்குவதற்காக மரங்களில் கூடு கட்டும். மற்ற வகை கரடிகளைவிட மிகப்பெரிய காதுகள் உள்ளன. இது உலகளவில் தோராயமாக 60,000 உள்ளது.

ராட்சத பாண்டாவின் ரோமங்கள் கறுப்பு மற்றும் வெள்ளை நிறத்தில் இருக்கும். இது தென்மேற்கு சீனாவில் மட்டுமே இருக்கும். 80-123 கிலோ வரை இருக்கும். இது பெரும்பாலும் மூங்கில் மட்டுமே உண்ணும். இதன் முன் பாதங்களில் ஆறு விரல்கள் உள்ளன. இது ஆறாவது கால்விரலைப் பயன்படுத்தும். இது உலகளவில் 1,000 மட்டுமே உள்ளது. ராட்சத பாண்டாக்கள் அழியும் அபாயத்தில் உள்ளன.

உலகின் மிகப்பெரிய கரடிகளில் பழுப்பு கரடியும் ஒன்று. 80-550 கிலோ வரை இருக்கும். பழுப்பு கரடி பெரும்பாலும் ஐரோப்பா, வட அமெரிக்கா மற்றும் ஆசியாவின் மலைகள் மற்றும் காடுகளில் காணப்படுகிறது. இதன் ரோமங்கள் பொதுவாக பழுப்பு

நிறத்திலும், கறுப்பு நிறத்திலும், வெள்ளை நிறத்திலும் இருக்கும். இதற்கு தோண்டுவதற்குப் பயன்படுத்தும் மிக நீண்ட நகங்கள் உள்ளன. இது அதிகமாக மாமிசத்தைச் சாப்பிடும் பழக்கமுடையது. இது உலகளவில் தோராயமாக 125,000 உள்ளது.

துருவ கரடி உலகின் மிகப்பெரிய கரடியாகும். 408-726 கிலோ வரை இருக்கும். கனடா, அலாஸ்கா, ரஷ்யா, நார்வே, டென்மார்க், ஸ்வீடன் மற்றும் கிரீன்லாந்து உள்ளிட்ட நாடுகளில் வாழும். இது வசிக்கும் டன்ட்ரா மற்றும் ஆர்க்டிக் கடலில் மிகவும் குளிராக இருக்கும். இதனிடம் அடர்த்தியான வெள்ளை ரோமமும், அடர்த்தியான அடுக்கும் உள்ளது. இதற்கு உடலில் அதிக கொழுப்பு தன்னை சூடாக வைத்திருக்கும். இது மீன்கள் மற்றும் வால்ரஸ்களை சாப்பிடும். பனிக்கரடிகளால் ஓய்வெடுக்காமல் 100 மைல் தூரம் வரை நீந்திச் செல்ல முடியும். இது உலகளவில் 27,000 வரை உள்ளது.

தேன் கரடி என்று அழைக்கப்படும் சோம்பல் கரடிகளுக்கு உடலில் முடி அடர்த்தியாக இருக்கும். 54-141 கிலோ வரை இருக்கும். இவற்றின் கால்களில் நகங்கள் மிக நீளமாக 25 செ.மீ. அளவுக்கு வளர்ந்திருக்கும். இதன் மார்பில் "U" வடிவத்தில் ஒரு வெளிர் நிற ரோமங்கள் உள்ளது. இது ஆசியாவில் இலங்கை, இந்தியா, நேபாளம், பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் வாழ்கிறது. இது தேனையும், கரையான்களையும் விரும்பி சாப்பிடும். இது உலகளவில் 25,000க்கும் குறைவாக உள்ளது.

கண்கண்ணாடி கரடி அடர் பழுப்பு அல்லது கருப்பு நிறத்தில் இருக்கும். 60-175 கிலோ வரை இருக்கும். இதன் கண்களைச் சுற்றி கண்ணாடி அணிந்தது போல இருக்கும். தென் அமெரிக்காவில் வாழும் ஒரே கரடி இதுதான். இதற்கு வலுவான பற்கள் மற்றும் தாடைகள் உள்ளன. இது பெரும்பாலும் தாவரங்களையே உண்ணும். 5% மட்டுமே இறைச்சி உண்ணும். இது உலகளவில் 18,000க்கும் குறைவாக உள்ளது.

சூரிய கரடி உலகின் மிகச்சிறிய கரடியாகும். 45 கிலோ எடை இருக்கும். 35-80 கிலோ வரை இருக்கும். இது தென்கிழக்கு ஆசியாவில் இருக்கிறது. இதன் நெஞ்சுப் பகுதியில் உதயசூரியன் கோல அடையாளத்தைக் கொண்டிருக்கும். 25 செ.மீ. நீளம் உள்ள நாக்கினைக் கொண்டிருக்கும். இது உலகளவில் 10,000க்கும் குறைவாக உள்ளது.

கரடிகளின் பித்தநீர் சில பாரம்பரிய ஆசிய மருத்துவர்களால் பயன்படுத்தப்படுகிறது. ஆசியக் கறுப்புக் கரடி, சூரியக் கரடி மற்றும் பழுப்புக் கரடிகள் இந்த பித்தநீருக்காக மனிதர்களால் சிறைபிடிக்கப்பட்டு வளர்க்கப்படுகிறது. இதற்காக வேண்டி சீனா, தென் கொரியா, லாவோஸ், வியட்நாம், மியான்மர், மலேசியா, ஜப்பான் ஆகிய நாடுகளில் பித்தத்திற்காக 12,000 கரடிகள் வளர்க்கப்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

வளர்க்கப்படும் பித்தநீர்க் கரடிகள் சிறிய கூண்டுகளில் தொடர்ந்து அடைக்கப்பட்ட நிலையில் வைக்கப்படுகின்றன. இதன் விளைவாக, அவை பெரும்பாலும் நிமிர்ந்து உட்காரவும் நிற்கவும் அமர்ந்த நிலையிலிருந்து திரும்பவும் இயலாது. கூண்டுக்குள் அடைக்கப்பட்டு வாழும் இக்கரடிகள் உடற்காயங்கள், வலி, கடுமையான மன உளைச்சல், தசைச் சிதைவு உள்ளிட்ட பல்வேறு உடல்நலக்கேடு நிலைகளுக்குத் தள்ளப்படுகின்றன. இவற்றில் பல கரடிகள் குட்டிகளாகப் பிடிக்கப்பட்டு 30 ஆண்டுகள் வரை இந்த கடுமையான அவலநிலையில் வைக்கப்பட்டு வளர்க்கப்படுகின்றன. மேலும், தோலுக்காகவும், மருத்துவ குணம் கொண்டதாகக் கருதப்படும் அவற்றின் கணையத்திற்காகவும் கரடிகள் வேட்டையாடப்படுகின்றன.

கரடிகள் இனங்கள் வேட்டையாடுதல், வாழிட அழிப்பு போன்ற காரணங்களால் அழியும் நிலையில் உள்ளன. இயற்கையின் அதிசய படைப்புகளில் ஒன்றான கரடிகள் அழியாமல் இருக்க ஜெபிப்போம்.

# மரத்திலுள்ள தேனை எடுக்க செல்வதற்கு பலசாலி கரடிக்கு சரியான வழிகாட்டுங்கள்



# வேதமே வெளிச்சம்


நாம் ஒருமித்து, இன்பமான
ஆலோசனைபண்ணி,
கூட்டத்தோடே
தேவாலயத்துக்குப் போனோம்
சங்கீதம் 55:14


God bless you - சங்கீதம் 37:4
கர்த்தரிடத்தில்
மனமகிழ்ச்சியாயிரு;
அவர் உன் இருதயத்தின்
வேண்டுதல்களை உனக்கு
அருள்செய்வார்.


என் கால்கள் வழுவாதபடிக்கு
நான் நடக்கிற வழியை
அகலமாக்கினீர்.
2 சாமுவேல் 22:37


கர்த்தாவே, நீர் எனக்குத்
துணைசெய்து என்னைத்
தேற்றுகிறதை என் பகைஞர்
கண்டு வெட்கப்படும்படிக்கு,
எனக்கு அநுகூலமாக
ஒரு அடையாளத்தைக்
காண்பித்தருளும்.
சங்கீதம் 86:17
God bless you

# வேதமே வெளிச்சம்


அழைக்கப்பட்டவர்கள்
அநேகர்
தெரிந்துகொள்ளப்பட்டவர்களோ
சிலர்
மத்தேயு 22:14


ஆண்டவர்
என்றென்றைக்கும் கைவிடமாட்டார்.
புலம்பல் 3:31


நீ மிகவும் பிரியமானவன்.
ஆதலால், நீ வேண்டிக்கொள்ளத்
தொடங்கினபோதே
கட்டளை வெளிப்பட்டது.
தானியேல் 9:23
God bless you


தேவன்தாமே
இவர்களுடைய
கண்ணீர் யாவையும்
துடைப்பார்.
வெளி 7:17
God bless you



# தாவீதும் கோலியாத்தும்

**1 சாமுவேல் 15-18ஆம் அதிகாரம் படித்து கேள்விகளுக்கு விடையளியுங்கள்.**

1. தாவீது இளமையாக இருந்தபோது என்ன வேலை செய்தான்?
2. எந்த தீர்க்கதரிசி தாவீதை ராஜாவாக அபிஷேகம் செய்தார்?
3. தாவீது சவுலுக்காக எந்த இசைக்கருவியை வாசித்தான்?
4. கோலியாத் எவ்வளவு உயரமாக இருந்தான்?
5. தாவீது கோலியாத்தை எப்படிக் கொன்றான்?
6. கோலியாத் இஸ்ரவேலரிடம் ஒருவனை அனுப்புமாறு எவ்வளவு காலம் சவால் விடுத்தான்?
7. இஸ்ரவேலர் மற்றும் பெலிஸ்திய படைகள் எங்கு முகாமிட்டன?
8. தாவீது ஓடையில் இருந்து எத்தனை கற்களை எடுத்தான்?
9. கோலியாத்துடன் சண்டையிட தாவீதுக்கு அனுமதி வழங்கியது யார்?
10. தாவீதின் மாபெரும் வெற்றியை இஸ்ரவேலர்கள் எவ்வாறு கொண்டாடினார்கள்?

விடைகள் 17ஆம் பக்கம் பார்க்கவும்




அன்பிற்குரிய அங்கிள், நலமா? ஒலிவமரக் கன்றுகள் இதழ் படிக்க படிக்க திகட்டாமல் நுணுக்கமான பயனுள்ள பல செய்திகள் மாதந்தோறும் தவறாமல் வாசித்து மகிழ்கிறேன். எனது குடும்பத்தில் அடிக்கடி அமைதி கெட்டு எனது படிப்பு தடைபடுகிறது. சமாதான குறைவு நீங்க எங்கள் குடும்பத்தில் என்ன செய்ய வேண்டும் என்பதற்கு தக்க ஆலோசனை வழங்க கேட்டுக்கொள்கிறேன்.

– ரஞ்சனி எஸ்தர், வண்ணாரப்பேட்டை

அன்புத் தங்கை உனது நீண்ட நெடிய கடிதம் கண்டேன். உனது குடும்பத்திற்காக ஜெபிக்கிறேன். கடிதத்தில் கண்ட சில விஷயங்களின் அடிப்படையில் ஒரு சில ஆலோசனைகளை உனக்கு மட்டுமல்ல, உன்னைப் போன்ற தம்பி தங்கைகளுக்கும் பயனளிக்க வேண்டும் என்று இதை பொதுவான கடிதமாக எழுதுகிறேன்.

ஒருவரது வாழ்க்கை எப்படி அமைகிறது என்பதற்கான அடிப்படை குடும்பங்களில் தான் இருக்கிறது. காரணம், குடும்பம் நன்றாக இருந்தால் அங்கே வளர்கின்ற பிள்ளைகள் நன்றாக இருப்பார்கள் என்பது தான்.

இளைஞர்களின் தேவபக்தியை வளர்க்கும் முயற்சிகள் குடும்பங்களில் தொடங்க வேண்டும். தேவனின் போதனைகளை மீறாத செயல்களை குடும்பத் தலைவரும், தலைவியும் செய்ய வேண்டும். குடும்பத்தில் பேசப்படும் வார்த்தைகள் கனிவின் வார்த்தைகளாக இருக்க வேண்டும். ஒருவருடைய பேச்சும், செயலும், சிந்தனையும் தேவனைச் சார்ந்து இருக்க வேண்டுமெனில் குடும்பம் எனும் நல்ல நிலத்தில் அவர்கள் விதைக்கப்பட வேண்டும்.

குடும்பத்தில் இளைஞர்கள் கற்றுக் கொள்கின்ற நல்ல பண்புகளை வளர்த்தெடுப்பதும், வார்த்தெடுப்பதும் அவர்களுக்கு அமைகின்ற நண்பர்கள் தான். நல்ல நண்பர்கள் அமைந்து விட்டால் ஒருவருடைய வாழ்க்கை மிகச் சிறப்பாக அமையும். சாத்ராக் மேஷாக் ஆபேத்நேகோவுக்கு தானியேல் எனும் ஒரு நல்ல நண்பன் இருந்தார். அவர்கள் நெருப்பிலும் தேவனை வெறுக்காமல் போற்றிப் பாடினார்கள். தாவீதின் வாழ்க்கையில் ஒரு நல்ல நண்பர் யோனத்தான் இருந்தார். ஆபத்துகள் வந்தபோது காப்பாற்றினார்.

நல்ல நட்பு அமைவதிலும் தேவ கிருபை நமக்குக் கிடைக்க வேண்டும். நல்ல நண்பர்களுக்காய் ஜெபிக்க வேண்டும். கெட்ட நண்பர்களைத் திருத்தும் முயற்சிகள் பயனளிக்காவிட்டால், அவர்களை விட்டு உடனடியாக விலக வேண்டும். ஒரு கெட்ட ஆப்பிளை எடுத்து, நல்ல ஆப்பிள்கள் இருக்கும் கூடையின் நடுவே வைத்தால் சில நாட்களிலேயே எல்லா ஆப்பிள்களும் கெட்டுப் போய்விடும். எனவே துஷ்டரைக் கண்டால் தூர விலகு என்பதைப் போல, தீய நண்பர்களை தூர நிறுத்த வேண்டும்.

ஒருவனுக்கு ஒரு நல்ல வழிகாட்டி அமைந்து விட்டால் அவருடைய வாழ்க்கை மிகச் சிறப்பாக அமைந்து விடும். அப்துல் கலாம் வாழ்க்கையில் ஒரு ஆசிரியர் அவருக்கு வழிகாட்டியாய் இருந்தார். அவருடைய வளர்ச்சி சிறப்பானதாக இருந்தது. எலிசாவுக்கு ஒரு எலியா கூடவே இருந்தார், ஆசானாக இருந்தார். குருவை மிஞ்சிய சீடனாக எலிசா மாறினார். சாமுவேலுக்கு வழிகாட்டியாக ஏலி இருந்தார், சாமுவேல் மாபெரும் தீர்க்கதரிசியானார். இளைஞர்கள் தங்களுடைய வழிகாட்டியாக ஒரு நல்ல தேவ மனிதரை தேர்ந்தெடுத்தால்

அவர்களுடைய வாழ்க்கை நிச்சயம் சரியான வழியில் செல்லும். இறைப்பற்றில் இளைஞர்கள் வளர அவர்களுக்கு ஒரு நல்ல ஆன்மிக வழிகாட்டியை ஏற்படுத்திக் கொடுப்பது அவசியம். இல்லையேல் அவர்கள் உலகப் பிரபலங்களை தங்கள் வழிகாட்டியாய் அமைத்து ஆன்மிக பாதையை விட்டு விலகி விடுவார்கள். பொழுதுபோக்கும் இறைப்பற்றை வளர்க்க முடியும். ஒரு மனிதனுடைய வாழ்க்கை மன அழுத்தங்கள் இல்லாத வாழ்வாய் அமைய இந்த பொழுது போக்கு பெருமளவில் கை கொடுக்கும். உள்ளம் அமைதியான நீரோடையாய் இருக்கும் போது அங்கே தவறான சிந்தனைகள் எழாது. நல்ல ஒரு பொழுது போக்கைத் தேர்ந்தெடுத்தால் அது இளைஞர்களுடைய தேவ பக்தியை ஆழமாக்கும்.

இன்றைக்கு யூடியூப், இன்ஸ்டாகிராம், ஃபேஸ்புக் என்றெல்லாம் இளைஞர்களின் வாழ்க்கை நீச்சலடிக்கிறது. அவர்களை அங்கிருந்து வெளியே கொண்டு வரவேண்டுமெனும் அவசியம் இல்லை. அந்த இடங்களில் எல்லாம் அவர்கள் தேவனுக்கு ஏற்புடைய செயல்களைச் செய்ய வழிகாட்டலாம். யூடியூப் வீடியோக்களோ, இன்ஸ்டா ஸ்டோரிகளோ கிறிஸ்தவ மதிப்பீடுகள் சார்ந்ததாக இருக்கும் போது, அவர்களுடைய பொழுதுபோக்கே பொழுதை ஆக்கும்! இசையோ, இலக்கியமோ, நாடகமோ, புகைப்படமோ அதில் தேவனைப் பிரதிபலிக்க முடியும்.

நல்ல செயல்களை சிறுவயதிலிருந்தே பழக்க வேண்டும். வித்தியாசமான அனுபவங்களை அவர்களுக்குக் கொடுக்க வேண்டும். உதாரணமாக, தினமும் நாம் சந்திக்கும் மனிதர்களில் நமக்கு பரிச்சயமே இல்லாத ஒரு நபருக்காக ஒவ்வொரு நாளும் ஜெபிக்கலாம். அந்த நபர் நாம் பேருந்தில் சந்தித்த முதியவராய் இருக்கலாம், சாலையோரம் உட்கார்ந்திருந்த இளைஞராய் இருக்கலாம், கடந்து சென்ற ஆம்புலன்சில் இருந்த நபராய் இருக்கலாம், பெயர் தெரியாத அந்த ஒரு மனிதருக்காக உருக்கமாய் ஜெபித்தால் அது மறைவான ஆசீர்வாதமாய் நமக்குள் நிரம்பும். பிறருக்காய் வாழும் வாழ்க்கை தேவனின் இதயத்தைத் தொடும்.

உண்மையான அன்பு என்பது கொடுப்பதில் இருக்கிறது என்பதைப் பழக்கலாம். கொடுத்தல் என்பது காசுகளைக் கொடுப்பது மட்டுமல்ல. நேசத்தோடு பேசுகின்ற ஒரு வார்த்தை கூட மேலானதே. கரிசனையோடு கேட்கின்ற ஒரு புலம்பல் கூட உயர்வானதே. நேரம், உழைப்பு, பணம் என எது நம்மிடம் இருக்கிறதோ அதை அடுத்தவர்களுக்குக் கொடுக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். எது இல்லையென்றாலும் ஒரு புன்னகையை நீங்கள் நிச்சயம் கொடுக்க முடியும். அந்தப் பழக்கத்தை உருவாக்கலாம்.

இளைஞர்களின் வாழ்க்கை செம்மையாகும்போது
தேவ பக்தியுள்ள சமூகம் உருவாகிறது!
தேவ பக்தியுள்ள சமூகம் உருவாகும் போது
மனித உறவுகள் செழுமையாகின்றன.

உனது குடும்பத்திற்காக ஜெபிக்கும்

**- J. ஜோசப் ஆஸ்பார்ன் ஜெபத்துரை**

15ஆம் பக்கத்தின் விடைகள்

## தாவீதும் கோலியாத்தும் - பதில்கள்

1. ஆடு மேய்த்தான், 2. சாமுவேல், 3. சுரமண்டலம், 4. ஆறுமுழமும் ஒரு ஜாண் உயரம், 5. கூழாங்கல்லை கவணில் வைத்து நெற்றியில் அடித்து, பின் வாலை எடுத்து வெட்டினான், 6. நாற்பது நாள், 7. ஏலா பள்ளத்தாக்கில், 8. 5 கூழாங்கல், 9. சவுல் ராஜா, 10. ஆடல் பாடலுடன் கொண்டாடினார்கள்.

# “கோலியாத்தை வீழ்த்திய தாவீது”
# தொடர்புடைய சொற்களை கண்டு வட்டமிடுக.

**தாவீது, பெலிஸ்தியர், கோலியாத், இஸ்ரவேலர், சவுல் ராஜா, சுரமண்டலம், கூழாங்கல், ஆறு முழம், நெற்றி, காத், அபிஷேகம், படைகள், ஏலா பள்ளத்தாக்கு, கவண்**



| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| லி | ஏ | யா | டை | த் | கோ | லி | யா | த் | லா |
| இ | லா | க் | ம் | ஆ | று | மு | ழ | ம் | பெ |
| சு | ப | ச | அ | ஷே | ப | ர | நெ | ஏ | லி |
| ர | ள் | வு | பி | ஸ் | டை | நெ | ற் | றி | ஸ் |
| ம | ள | ல் | ஷே | கூ | க | ழா | வே | பி | தி |
| ண் | த் | ரா | க | ஜா | ள் | தா | வீ | து | ய |
| ட | தா | ஜா | ம் | கோ | க | வ | ண் | அ | ர் |
| ல | க் | கு | க | கூ | ழா | ங் | க | ல் | கா |
| ம் | கு | இ | ஸ் | ர | வே | ல | ர் | ய | த் |

# கற்கை நன்றே

உலக வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால் மாபெரும் மாற்றங்களெல்லாம் வெகு சில ஆளுமைகளால் உருவாகியிருப்பதைக் கண்டு கொள்ள முடியும்.

மார்ட்டின் லூத்தர்கிங் எனும் தனிமனிதருடைய ஆளுமைத் திறமை தான் கருப்பின மக்களின் விடுதலைக்கான கருவியானது. வட அமெரிக்காவின் தெற்குப் பிராந்தியத்தின் நிற வேற்றுமைக்கு முடிவு கட்டியது அவர் தான்.

கார்ல் மார்க்ஸ் எனும் மனிதருடைய சமத்துவச் சித்தாந்தம் தான் உலக அளவிலேயே மிகப்பெரிய சமூகப்புரட்சியை உருவாக்கியது. பல நாடுகளின் அரசியல் கட்டமைப்புக்கும், சமூக மறுமலர்ச்சிக்கும் அவரது சிந்தனைகளே அடித்தளமிட்டன. இப்படி ஏராளம் உதாரணங்களைச் சொல்ல முடியும்.

வேதத்தின் வரலாற்றைப் புரட்டிப் பார்த்தாலும் மோசே எனும் ஆளுமை தான் இஸ்ரேல் மக்களுடைய விடுதலைக்கான விதை. அவருடைய செயல்பாடுகள் தான் பல நூற்றாண்டு அடிமைத்தனத்தை உடைத்தெறிந்து மக்களை விடுதலை வழியில் நடத்தியது.

தாவீது எனும் மன்னனுடைய ஆளுமைத் தன்மை தான் இஸ்ரேல் மக்களுக்கு நீண்ட நெடிய காலம் மிகச் சிறந்த ஆட்சியைக் கொடுக்க முடிந்தது. இஸ்ரேல் நாட்டின் ஒருமைப்பாட்டையும், கண்ணியத்தையும் கட்டிக் காத்தது.

இப்படிப்பட்ட ஆளுமைகளை நாம் கூர்ந்து கவனித்தால் அவர்களுக்கிடையே சில ஒற்றுமைகளைக் கண்டு கொள்ளலாம். அவற்றில் மிக முக்கியமான ஒன்று சக மனித கரிசனை. இன்னொன்று தார்மீகக் கோபம். இவை இரண்டுமே இரண்டறக் கலந்தவை எனலாம். சக மனிதன் மீதான நேசம் இருப்பவர்களால் மட்டுமே, அவர்களுக்கு எதிரான வன்முறைகளுக்கு எதிராக தார்மீகக் கோபம் கொள்ள முடியும்.

வெந்ததைத் தின்று, விதி வந்தால் சாவோம்; என்றிருக்கும் மக்களால் ஆளுமைகளாக எப்போதுமே உருவாக முடியாது. சூழல்களின் அடிமைகளாக மட்டுமே வாழமுடியும் என்பதே உண்மை. இந்த ஆளுமைத் தன்மையைக் கட்டமைக்கும் வேலையைச் செய்வதில் கல்வி மிக முக்கிய இடத்தில் இருக்கிறது. ஒரு குயவனைப் போல வனைகின்ற ஆசிரியரின் கைகள் தான் அழகிய கலைகளையும், பயனுள்ள பாண்டங்களையும் உருவாக்குகிறது.

இயேசு சொன்ன வீடுகட்டுபவரின் உவமை இதன் ஒரு சிறந்த உதாரணம் எனலாம். ஒருவர் வீட்டை மணலின் மீது அடித்தளமிட்டுக் கட்டுகிறார். அது புயல்காற்றின் விரல்கள் தீண்டியபோதே விழுந்து அழிகிறது. இன்னொருவர் வீட்டை பாறையின் மீது கட்டுகிறார். அதை புயலின் கரங்கள் புரட்டிப் போட முடியவில்லை. நிலைத்து நிற்கிறது.

கல்வி எனும் அடித்தளத்தின் மீது கட்டப்படுகின்ற வாழ்க்கையானது, அலைகளையும் புயல்களையும் சந்தித்தாலும் நிலைகுலையாது. நிலைபெயராது. எனவே தான் ஒரு சமூகம் கல்வி கற்கவேண்டியது தேவையாகிறது. அதனால் தான் ஒரு சமூகத்திற்கு கல்வி மறுக்கப்படும்போது அங்கே சமூக அநீதி தாண்டவமாடுகிறது.

‘‘தன் நண்பனுக்காக உயிரைக் கொடுப்பதை விட மேலான அன்பு எங்கும் இல்லை’’ என்றார் இயேசு. அவர்களுடைய வாழ்வில் ஒளியேற்ற நாம் செய்ய வேண்டியது எதுவென சிந்தித்துப் பார்க்க வேண்டிய தருணம் இது. அவரை மூலைக்கல்லாய்க் கொண்டு நமது எதிர்காலத்தை கட்ட வேண்டியது அவசியம்.

கல்வி என்பது வெறுமனே தகவல்களைச் சேமித்து வைக்கும் இடம் அல்ல. அது வாழ்வியலுக்கான பாடங்களைக் கற்றுக் கொள்ளும் இடம். ஆசிரியர்கள் என்பவர்கள் வெறும் எழுத்துகளை நமக்குள் ஊற்றிச் செல்பவர்கள் அல்ல, எண்ணங்களை நமக்குள் ஊன்றிச் செல்பவர்கள். அவை தான் நமது எதிர்காலத்தை நிர்ணயிக்கின்றன.

தவறு செய்கின்ற தருணங்களில், ''படிச்சவன் தானே நீ'' என நம்மை நோக்கிக் கேள்விகள் எழுவதுண்டு. படித்தவனுக்குள் நல்ல எண்ணங்களும், சிந்தனைகளும், செயல்பாடுகளும் இருக்கும் எனும் நம்பிக்கை தான் அதன் காரணம்.

கல்வி தருகின்ற படிப்பினைகளில் மிக முக்கியமானது இணைந்து செயலாற்றுகின்ற தன்மை. சமூக வாழ்வுக்கும், சமூக மாற்றத்துக்கும் அடிப்படையாய் அமைவது 'இணைந்து வாழவேண்டும்' எனும் சிந்தனைதான். சக மனித உறவுகளைக் கட்டியெழுப்பும் முதல் தளமாக கல்வி இருக்கிறது. பிறருடைய உணர்வுகளை மதிக்கவேண்டும் என்பதும், பிறரையும் தன்னைப் போல நினைக்க வேண்டும் என்பதும் இந்த காலகட்டத்தில் தான் கட்டமைக்கப்படும்.நட்புகளுக்காக வாழ்வதும், விட்டுக்கொடுப்பதும், உதவுவதும் என சமூகத்துக்குத் தேவையான ஆளுமைத் தன்மைகளை இங்கே கற்றுக் கொள்ளலாம்.

பிறரை மதிக்க கற்றுக்கொள்கின்ற முக்கியமான இடம் கல்வி நிலையம் எனலாம். தலைமைக்குக் கட்டுப்பட்டு இருக்க வேண்டும் என்பதன் தேவையை நாம் கற்றுக் கொள்வது இங்கே தான். எந்த ஒரு தலைவருக்கும் இருக்க வேண்டிய மிக முக்கியமான குணாதிசயம் பிறரை மதிப்பது என்பதில் சந்தேகமில்லை. தலைமையை மதிப்பது, பிறருடைய கருத்துகளுக்கு மரியாதை கொடுப்பது போன்றவையெல்லாம் ஆளுமை உருவாக்கத்தில் மிகப்பெரிய பங்காற்றுபவை.

இதயத்தில் உருவாக வேண்டிய இன்னொரு முக்கியமான சிந்தனை சமத்துவம் சார்ந்தது. சமத்துவம் என்பது உள்ளம் சார்ந்தது. சமத்துவம் என்பது வாய்ப்புகள் சார்ந்தது. சமத்துவம் என்பது மனிதம் சார்ந்தது.

கல்வி நமக்கு எல்லைகளற்ற கற்பனையைத் தருகிறது. நமது கலை ஆர்வத்துக்கும், புதுமைகளைத் தேடவேண்டும் எனும் ஆர்வத்துக்கும் தீனி போடும் தளம் அது தான்.

தன்னம்பிக்கை தான் எந்த ஒரு வெற்றிக்கும் அடிப்படைத் தேவை. தன்னம்பிக்கை இல்லாத மனிதர்கள் வெற்றியாளர்களாய் பரிமளிப்பதில்லை. எந்த ஒரு ஆளுமைத் தன்மையுடைய மனிதரைப் பார்த்தாலும், அவர்களுடைய திறமைகளுக்கும் முன்னால் வந்து நிற்பது அவர்களுடைய தன்னம்பிக்கை தான்.

இப்படி ஆளுமை உருவாக்கத்தில் கல்வியின் பங்களிப்பு தவிர்க்க முடியாதது. அதை அனைவருக்கும் கிடைக்க வழிசெய்வதே மிகச்சிறந்த பிறர்நலப் பணி. பிறர்நலம் பேசுவதே ஆவிக்குரிய கிறிஸ்தவத்தின் முதன்மை நிலை.


''என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்'' (மத்தேயு 11:29).

**பரிசுத்த வேதாகமத்தில் கரடி என்ற சொல் வரும் வசனங்களை எழுதுக**

விடைகள் 23ஆம் பக்கம் பார்க்கவும்

# பயில்வான் கரடி!

கரடியின் படத்தைப் பார்த்து நீங்களே வரைந்து பழகுங்கள் குழந்தைகளே.



# அன்பு

கடல் என்பதும் கடற்கரை என்பதும் மனித வாழ்க்கையில் தவிர்க்க முடியாத இடங்கள் என்பதில் சந்தேகமில்லை. சோர்வுகள் சுற்றப்பட்ட நிலையில் கடற்கரையில் வந்தமரும் மனிதர்கள் அதன் பிரம்மாண்டத்திலும், அதன் காற்றிலும் சோகத்தை மணலோடு சேர்ந்து உதறி விடுவது வெகு இயல்பு.

கடற்கரையில் அமர்ந்து கடலின் பிரம்மாண்டத்தை வியக்கும் அனைவரின் மனதிலும் இருக்கின்ற ஒரு கேள்வி, இத்தனை பிரம்மாண்டம் எப்படி இங்கே அமைதியாய் இருக்கிறது என்பது தான். இதன் ஆழம் என்ன என்பதை யாரால் கண்டுபிடிக்க முடியும்? கடலுக்குள் மூழ்கிப் போன ஒரு கப்பலைக் கண்டுபிடிக்க மனிதர்களுக்கு பல நூற்றாண்டுகள் தேவைப்படுகின்றன. பல கண்டுபிடிக்கப்படாமலேயே போய்விடுகின்றன! அந்த அளவுக்கு ஆழமானது கடல்!

தேவனின் அன்பும் அளவிட முடியாத ஆழமானது! கரங்களுக்குள் அடக்கி விட முடியாத அளவுக்கு நீளமானது! கண்ணுக்குத் தெரிந்த ஒரு பொருளுடன் ஒப்பிடவேண்டுமெனில் தேவனின் அன்பை ஒப்பிட கடலை விட அழகான ஒரு பொருள் கிடைப்பதில்லை. தேவனின் இயல்புகளைப் பற்றிப் பேசும்போது பரிசுத்த வேதாகமம் கடலை இதனால் தான் உதவிக்கு அழைக்கிறது. தேவனின் எல்லை ஆழ்கடலை விட அகலமானது (யோபு 11:9) என்கிறது பரிசுத்த வேதாகமம் தேவனுடைய தீர்ப்புகள் கடல்போல் ஆழமானவை என்கிறது சங்கீதம்!

அன்பு என்பது அமைதியாய் இருக்கும். நமது மனங்களிலும் அத்தகைய ஆழமான ஒரு அன்பு நிலை உருவாக வேண்டும். அந்த அன்பு நீந்த நீந்த தீராததாக, மூழ்க மூழ்க தரையை எட்டாததாக இருக்கவேண்டும்.

''கடற்கரையிலேயே இவ்வளவு அலைகள் இருந்தால் கடலுக்கு உள்ளே நடுக்கடலில் ஏகப்பட்ட அலைகள் இருக்கும் இல்லையா?'' என அப்பாவின் கையைப் பிடித்து ஒரு முறை கேட்டேன். ‘கரைகள் தான் சலசலக்கும், ஆழ்கடல் அமைதியாய் இருக்கும்’ என்றார். அப்போது அதை என்னால் விளங்கிக் கொள்ளமுடியவில்லை. இப்போது அந்த உண்மை மிக எளிதாய் நமக்கு புரிந்து விடுகிறது.

அன்பின் பிரம்மாண்டம் அமைதியாய் இருக்கிறது. இரக்கத்தின் செயல்கள் அலைகளாய் அலைகின்றன எனலாம். ஆழமான அன்பு கொண்ட கடலில் தான் அலைகள் தொடர்ந்து இயங்கிக் கொண்டே இருக்கும். ஒரு டம்ளர் நீரில் அலை வருவதில்லை. நீர்த்தேக்கங்களில் மிகச் சிறிய அலைகள் எழும். அன்பின் ஆழம் எங்கே அதிகமாய் இருக்கிறதோ, செயல்களின் வேகமும் அங்கே தான் அதிகமாக இருக்கும்.

நமது இதயம் அன்பின் கடலாக இருக்கிறதா என்பதை நமது செயல்கள் எனும் அலைகள் எவ்வளவு தொடர்ச்சியாக வீசிக்கொண்டிருக்கின்றன என்பதை வைத்து அறிந்து கொள்ளலாம். அலையடிக்காத கடலாய் நாம் இருந்தால், உடனடியாக நமது இதயத்தின் அன்பை கேள்விக்கு உட்படுத்துவோம். அன்பின் செயல்களை அலைகளால் அறிவிப்போம்.

கடல் நீரை அள்ளி கண்களில் தெளித்தால் உறுத்தும்! நாவில் உப்புக்கரிக்கும். கடலின் அலைகள் சில வேளைகளில் நம்மைப் புரட்டித் தள்ளும். பாய்மரப் பயணங்கள் நம்மை நிலைகுலைய வைக்கும். கடலுக்குள் பயணிக்கவும், கடவுளுக்குள் பயணிக்கவும் நமக்கு துன்பங்களைச் சகிக்கும் மனநிலை வரவேண்டும். சின்னச் சின்ன அசௌகரியங்களைக் கண்டு பயந்தால் கடல் அலைகளின் அழகை ரசிக்க முடியாது. எதிர்பாரா நிகழ்வுகள் வருமோ என அஞ்சினால் கடல்பயணம் கைவராது.

கடலலையில் கால் நனையாமல் வெறுமனே பார்த்துக் கொண்டிருப்பவர்களின் சகவாசம் மணலோடு முடிந்து போய் விடுகிறது. கிளிஞ்சல்களோடு திருப்திப்படும் வாழ்க்கை அது! ஆனால் கடலோடு கலக்க தயாரானால் மட்டுமே இனிமைகள் சொந்தமாகும்.

கடலில் இருக்கின்ற உயிரினங்களின் வகைகளை மனுக்குலம் இதுவரை கண்டுபிடித்து முடிக்கவில்லை. இன்னும் சுமார் 70% கடல்வாழ் உயிரினங்கள் கண்டுபிடிக்கப்படவில்லை என்கிறது அறிவியல். இதுவும் ஒரு தோராயக் கணக்கு மட்டுமே. இந்த சதவீதம் 99 விழுக்காடு என்று இருந்தால் கூட ஆச்சரியம் இல்லை.

ஆழ்கடலில் மூழ்குபவர்கள் முத்துகளைக் கண்டடைகிறார்கள். புதிய அனுபவங்களைப் பெறுகிறார்கள். யாருக்கும் கிடைக்காத அழகிய புதையல்களை சொந்தமாக்குகின்றார்கள். கடலின் எழிலை விழிகளுக்கு வழங்குகின்றனர்.

இறை அனுபவமும் அப்படியே. தேவ வார்த்தைகளில் மூழ்குபவன் கடல் தரும் வியப்பைப் போல, தேவன் தரும் வியப்பைக் கண்டு கொள்கிறான். மூச்சடக்கி மூழ்கத் தயாராக இருந்தால், இறைவனது பிரமிப்பின் அழகைக் கண்டு கொள்ள முடியும்.

எத்தனை கோப்பைகளில் அள்ளி அள்ளிக் கரையில் கொட்டினாலும் தீராத ஒன்று கடல் மட்டும் தான். தேவனின் மன்னிப்பும் அத்தகையதே. நமது பாவங்கள், தவறுகள் கடலில் இருந்து தண்ணீரை அள்ளி வெளியே கொட்டுகின்றன. ஆனால் கடல் குறைபடுவதில்லை. தண்ணீர் தரமாட்டேன் என தகராறு செய்வதில்லை. வேண்டும் அனைவருக்கும் மன்னிப்பை அளிக்கிறார் தேவன். முரண்டுபிடிப்பதில்லை.

தீராத அன்பெனும் தேவனை விடாமல் பற்றிக் கொண்டிருக்கின்றோமா என்பதே கேள்வி. கடல் எனும் தேவனின் அன்பை, கடல் எனும் தேவனின் மன்னிப்பை, தன்னை இழந்து மழையாய் பூமியை சிலிர்க்க வைக்கும் நேசத்தை, பொக்கிஷங்களைத் தன்னுள் புதைத்து வைத்து மனிதனை அழைக்கும் மென்மையை நாம் புரிந்து கொள்கிறோமா என்பதே கேள்வி!

கடல் என்பது ஒரு குறியீடு! தேவனின் அன்பைப் போல ஈரம் வற்றாத ஒரு இடம். சோகத்தை கரைக்கும் ஒரு இடம். கடலெனும் தேவனின் அன்பை உணர்வோம், உரைப்போம்.

அன்பே பிரதானம்.

**20ஆம் பக்கத்தின் விடைகள்**

**பரிசுத்த வேதாகமத்தில் கரடி என்ற சொல் வரும் வசனங்கள்:**

I சாமுவேல் 17:34, I சாமுவேல் 17:36, I சாமுவேல் 17:37, II சாமுவேல் 17:8, II இராஜாக்கள் 2:24, நீதிமொழிகள் 17:12, நீதிமொழிகள் 28:15, ஏசாயா 11:7, ஏசாயா 59:11, புலம்பல் 3:10, தானியேல் 7:5, ஓசியா 13:8, ஆமோஸ் 5:19, வெளி 13:2

# சாமி தந்த பூமி

அக். 7

## மண் வளம் விழிப்புணர்வு நாள்

இன்றைய சமூகம் உள்ளங்களிலும், ஊரிலும் அழுக்குகளால் நிரம்பியதாய் மாறிக் கொண்டிருக்கிறது. நெகிழிகள் முதல், உதாசீனப்படுத்துதல் வரை நிலம் பல இன்னல்களைச் சந்தித்துக் கொண்டிருக்கிறது. அன்பும், மனித நேயமும் நிறைந்த மனிதர்கள் அருகி வரும் உயிரினம் போல எங்கேனும் தான் தட்டுப்படுகிறார்கள். மனிதர் மீது அன்பு பாராட்டாதவர்கள் நிலத்தின் மீது எப்படி நேசம் காட்டுவார்கள்? சுயநலத்தின் சாலைகளில் தான் பொதுநலத்தின் சிந்தனைகளும் புதைக்கப்படுகின்றன.

பொதுவில் கிடந்த வளங்கள் வரங்களாய் இருந்தன. அவை சுரண்டப்பட்டு அதிகாரத்தின் பைகளில் பதுங்கியபோது சாபமாக மாறிவிட்டது. மண் வளமே பிற வளங்களைத் தாங்கிப் பிடிக்கிறது. உயிர்களின் இருப்பிடமாகவும், பயிர்களின் பிறப்பிடமாகவும், வாழ்வின் மகிழ்விடமாகவும் இருப்பது நிலமே.

லேவியராகமத்தில் ''நிலம் என்னுடையது'' என்கிறார் தேவன். நிலத்தை மனிதன் வெட்டிக் கூறுபோட்டு, பூர்வ குடிகளை விரட்டியடிக்கும்போது தேவனின் சினம் நிலத்தின் மீது விழுகிறது.

இந்த மண் வளத்தை ஏன் நாம் காப்பாற்ற வேண்டும்? நாம் மண்ணின் பாகமாய் இருக்கிறோம். தேவன் நம்மைப் படைத்தபோது மண்ணிலிருந்து தான் உருவாக்கினார். நமக்குள் மண் இருக்கிறது. மண் தான் மனிதனின் முதல் மூலக்கூறு. தேவனின் உயிர் மூச்சு நமக்குள் உலவுகிறது, மண்ணின் உடல் வடிவம் தான் நமக்குள் நிலவுகிறது. எனவே அடிப்படையிலேயே நாம் மண்ணோடு உறவாய் இருக்கிறோம். அந்த உறவைப் பேணவேண்டியது நமது கடமை!

உருவாகும்போது எப்படி மண் மனிதனாய் மாறியதோ, அதே போல விடை பெறுகையில் மனிதன் மண்ணாகிறான். மண்ணோடு உறவாடுகிறான். மண்ணோடு கலந்து விடுகிறான். மனிதன் மண்ணின் பாகமாய் மாறிவிடுகிறான். சுழற்சி நிறைவு பெறுகிறது. மண்ணினால் துவங்கி, மண்ணுடன் அடங்கிவிடும் வாழ்க்கை முறையையே தேவன் நமக்குத் தந்திருக்கிறார். எனவே மண் வளம் காக்க வேண்டியது நம் கடமையாகும்.

### மண் வளம் காத்தல் நமக்கு தேவன் அளித்த பணி

தேவன் மனிதனுக்கு இட்ட முதல் பணியே நிலத்தைப் பண்படுத்துவதும், பாதுகாப்பதும் தான். ''ஏதேன் தோட்டத்தைப் பண்படுத்தவும் பாதுகாக்கவும் ஆண்டவராகிய தேவன் மனிதனை அங்கு கொண்டுவந்து குடியிருக்கச் செய்தார்''! அது தான் தேவன் மனிதனுக்குக் கொடுத்த முதல் அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டர்.

மண்ணைப் பண்படுத்த மறுக்கும் போது நாம் தேவனின் விருப்பத்தை நிராகரிக்கிறோம். மண்ணை புண்படுத்தும் போது நாம் தேவனையே நிராகரிக்கிறோம்.

நிலத்தைப் பாதுகாப்பது என்பது நிலத்தின் மாண்பினைப் பாதுகாப்பதும், வளத்தினைப் பாதுகாப்பதுமாகும். எப்படி நிலம் மாசுகளால் மலட்டுத் தன்மை ஆகாமல் தடுக்க வேண்டுமோ, அதே போல நிலம் சாத்தானின் ஊடுருவல் இல்லாமலும் தடுக்க வேண்டும். ஆதாம் செய்த பிழைகளையே நாமும் செய்யாமல் கவனமாய் இருக்க வேண்டும்.

தேவன் மனிதனுக்குக் கொடுத்த பணியை மனிதன் செய்யத் தவறியிருக்கலாம். ஆனால் இயற்கைக்குக் கொடுத்த பணியை அவை செவ்வனே செயல்படுத்துகின்றன. கரையைத் தாண்டி வராதே எனும் கட்டளையை ஏற்று கடல் அங்கேயே நிற்கிறது. நிலத்தைத் தனியே பிரித்த தேவன் அதற்குத் தேவையான வளம் தரும் நதிகளையும் தருகிறார்.

நிலத்தைப் பண்படுத்துவதும், பாதுகாப்பதுமே நம்மால் செய்ய இயன்ற பணிகள். ஒரு விதையை முளைக்க வைப்பது தேவனே. விதைப்பதால் ஒரு விதை முளைப்பதில்லை, அதற்குத் தேவையான வளங்களைக் கொடுப்பதால் முளை வருவதில்லை. எல்லாவற்றுக்கும் மேல் தேவனின் அருள் தேவைப்படுகிறது. நமது பணி ஐந்து அப்பம் கொடுத்த சிறுவனைப் போன்றது. அதை ஐயாயிரம் பேருக்கு அளிப்பது தேவனின் பணி.

தேவன் நம்மிடம் எதிர்பார்ப்பது அதைத் தான். நிலத்துக்காக நாம் வானத்தை இழுத்து வந்து வாய்க்காலில் போடவேண்டுமென அவர் எதிர்பார்க்கவில்லை. அவர் தந்ததை காயப்படாமல் காப்பாற்ற வேண்டுமென விரும்புகிறார். மண் தேவனின் கட்டளையைக் கேட்கிறது, நாம் தேவனின் கட்டளைக்குச் செவி சாய்க்கிறோமா?

படைப்புகள் தேவனைப் புகழ்கின்றன. நிலத்தில் முளைக்கும் செடிகளும் கொடிகளும் பூக்களும் கனிகளும் தேவனின் மாட்சியைப் பறைசாற்றுகின்றன. தேவனைப் புகழும் நாவினை நாம் நறுக்கிவிடக் கூடாது. தேவனை நேசிக்கும் இயற்கையை நாம் சிதைத்து விடக் கூடாது. ஒருவரை நாம் நேசிக்கிறோம் என்பதன் அடையாளம் இரண்டு. ஒன்று அவர் சொல்வதைச் செய்கிறோம், இரண்டு அவருக்குப் பெருமை சேர்க்கும் விதமாய் செயல்படுகிறோம்.

தேவன் சொல்வதை நாம் செய்கிறோமா? தேவனுக்குப் புகழ் சேரும் வகையில் செயல்படுகிறோமா? இயேசு வாழ்ந்த காலத்தில் நிலத்தைத் தன் போதனைகளில் பயன்படுத்தினார். தேவனின் ஆசீர்வாதத்தின் அடையாளமாக பழைய ஏற்பாடு விளைச்சலைப் பேசியது!

இயேசு நல்ல நிலமாய் வாழ நமக்கு அழைப்பு விடுத்தார். நாம் நல்ல நிலமாய் இருக்கிறோமா? நம்மிடம் இருக்கும் நல்ல நிலத்தைக் கெட்ட நிலமாய் மாற்றுகிறோமா? இயற்கையை அழகுபடுத்தி, அதன் மூலம் தேவனை மகிமைப்படுத்துவோம். எல்லாவற்றுக்கும் மேலாய், இயேசு மீண்டும் மண்ணில் வரப் போகிறார். அவரை வரவேற்க மண் புனிதமாய் இருப்பதல்லவா சிறப்பானது!

கிறிஸ்தவர்களின் கடமை என்பது கனிகொடுக்கும் வாழ்க்கை தான். வெறுமனே வாயால் பாடுதலோ, புகழ்தலோ, பேசுதலோ அல்ல! நமது அன்பின் செயல்கள் எப்படி வெளிப்படுகின்றன என்பதை வைத்துத் தான் நமது வாழ்க்கை அளவிடப்படுகிறது.

சக மனித கரிசனையையும், மனிதநேயத்தையும் இயேசு தனது அத்தனை போதனைகளிலும் முன்னிறுத்தினார். நாம் வாழும் சமூகத்தைக் கட்டியெழுப்ப வேண்டிய தார்மீகக் கடமையை அவரது போதனைகள் அடிநாதமாய்க் கொண்டிருக்கின்றன. சக மனிதன் வாழ்வதற்கான ஒரு நல்ல சூழலை உருவாக்கிக் கொடுப்பது நம் கடமை.

சக மனிதனின் மேம்பாட்டுக்கானவற்றைச் செய்வது நம் கடமை. சக மனிதனை நம்மைப் போல நேசிப்பது நம் கடமை! அதற்கு நிலத்தை நேசிப்பது மிக முக்கியம்! வளத்தை மேம்படுத்துவது மிக மிக அவசியம்.

# வங்கிக் கணக்கின் (Bank Account) விபரம்:

ஏலிம் ஊழியங்கள் மற்றும் அன்றன்றுள்ள அப்பம் ஊழியங்களை பொருளாதார உதவிகளால் தாங்க விரும்பினாலோ, காசோலை (Cheque) / கேட்பு வரைவோலை (Demand Draft) மூலம் அனுப்புவதாக இருந்தாலோ, கீழ்க்காணும் ஏதேனுமொரு பெயரில் எடுத்து எமது அலுவலக முகவரிக்கு பதிவு அஞ்சல் (Registered Post) அல்லது தூதஞ்சல் (Courier) மூலமாக அனுப்பலாம்.

1. ACCOUNT NAME : **MR. JOSEPH OSBORNE JEBADURAI**
   ACCOUNT NO. : 49 510100003062

2. ACCOUNT NAME : **ANTANTULLA APPAM TRUST**
   ACCOUNT NO. : 49510200000122
   BANK NAME : **BANK OF BARODA**
   IFSC CODE : BARB0KODAMB (5TH CHARACTER IS ZERO)
   SWIFT CODE : BARBINBB
   BRANCH & CODE : UNITED INDIA COLONY, KODAMBAKKAM & 4951
   CHENNAI – 600 024.

**APPAM - GOOGLE PAY : 98406 95296**

**ELIM - GOOGLE PAY : 98848 77607**

**Address : J. JOSEPH OSBORNE JEBADURAI**
**50, Railway Station Road, Kodambakkam, Chennai - 600 024. Tamil Nadu**

1. ACCOUNT NAME : **ELIM GLORIOUS REVIVAL CHURCH**
   ACCOUNT NO. : 49510100000230

2. ACCOUNT NAME : **MR. JOSEPH OSBORNE JEBADURAI**
   ACCOUNT NO. : 49510100003063
   BANK NAME : BANK OF BARODA
   IFSC CODE : BARB0KODAMB (5TH CHARACTER IS ZERO)
   BRANCH : KODAMBAKKAM
   CHENNAI - 600024

உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும். யோவான் 16:20

## ஏலிம் மகிமையான எழுப்புதல் தேவாலயம்



நடத்தும்

# குடும்ப

# ஆசீர்வாத எழுப்புதல்

# அக்கினி அபிஷேக முகாம்

**அக்டோபர்**

**2,3,4,5**

புதன், வியாழன், வெள்ளி & சனி

9 AM TO 1 PM

**2024**









பாஸ்டர். **ஆஸ்பார்ன் ஜெபத்துரை**, சகோ. **C. எபிநேசர் பால்**,
பாஸ்டர். **ஜெபராஜ்**, பாஸ்டர். **லூகாஸ் சேகர்**

பாவமா ?
வியாதியா ? வாருங்கள்
கவலையா ? அற்புத விடுதலையைப்
கண்ணீரா ? பெற்றுக்கொள்ளுங்கள்

தனிமனித எழுப்புதல் | குடும்ப எழுப்புதல் | தேச எழுப்புதல்

**வாருங்கள் ஜெபிப்போம்! தேசத்தில் & குடும்பத்தில் எழுப்புதலை காண!**



சகோதரி **ஹேமா ஜான்**
(ஆராதனை)

**ஏலிம் மகிமையான எழுப்புதல் தேவாலயம்**

50, இரயில்வே ஸ்டேஷன் ரோடு, கோடம்பாக்கம், சென்னை–600024

**தொடர்புக்கு : 9884908777, 9003067777**

ELIMGRC | ANTANTULLA APPAM

முடிவிலே ஆசீர்வாதமான உணவு உண்டு

**அனுமதி இலவசம்**




If undelivered please return to:

**Elim Glorious Revival Church**

**#50, Railway Station Road, Kodambakkam, Chennai - 600024, India**
**for 24X7 Prayer: 91-9444322200, 9444322211**
**Email: enquiry@elimgrc.com, Website: www.elimgrc.com**